SPECIAL GUIDE FOR THE STUDENTS

PARTICIPATING IN THE TALENT TESTS

PART 1 - MENTAL ABILITY TEST

(NMMS, TRSTSE & NTSE)

திறனறித் தேர்வில் பங்கேற்கும்

மாணவர்களுக்கான

சிறப்புக் கையேடு

பகுதி 1 - மனத்திறன் தேர்வு

தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.

Scanned by TapScanner

தேசிய வருவாய்வழி மற்றும் திறனறித்தேர்வு (NMMS)

அறிவார்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கும், தேர்வில் வெற்றி பெற்று சாதனை படைக்கவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கும், வணக்கம்.

எந்த ஒரு போட்டித் தேர்வு எழுத தயாராகும்போதும், அத்தேர்வினைப் பற்றிய முழு அறிவு அவசியம். எனவே, தேசிய வருவாய்வழி மற்றும் திறனறித் தேர்விற்கு (National Means cum Merit Scholarship Exam) தயாராகும் முன்னர், NMMS தேர்வு எழுதுவதற்கான மாணவருக்கு உரிய தகுதிகள், தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை, தேர்வின் பகுதிகள், தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள், மாணவர்கள் தேர்வு செய்யப்படும் விதம், தேர்வின் மூலம் கிடைக்கும் உதவித்தொகை போன்ற விபரங்களை அறிதல் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

NMMS தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :

❖ அரசு / அரசு உதவி பெறும் / ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுள் ஏழாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வில் 55% மதிப்பெண்களுக்கு குறையாமல் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவியர்கள் இத்தேர்வினை எழுதலாம்.(SC / ST) மாணவ / மாணவியர்கள் 50% மதிப்பெண்கள் மட்டும் பெற்றிருந்தால் போதுமானது).

❖ மாணவ / மாணவியரின் பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.1,50,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

❖ தொடர்ந்து பள்ளிக்கு வரும் மாணவ / மாணவியராக (Regular Student) இருக்க வேண்டும்.

தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :

❖ பொதுவாக செப்டம்பர் - அக்டோபர் மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும்.

❖ www.dge.tn.nic.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்

.

❖ அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தேர்வின் பகுதிகள் :

NMMS தேர்வானது இரு பகுதிகளை (தேர்வுகளை) உள்ளடக்கியதாகும்.

❖ பகுதி - I (மனத்திறன் தேர்வு)

❖ பகுதி - II (படிப்பறிவுத் திறன் தேர்வு)

Scanned by TapScanner

பகுதி - I (மனத்திறன் தேர்வு)

- மனத்திறன் தேர்வானது (MAT) மாணவர்களின் பகுத்தாயும் திறன், காரணம் அறியும் திறன், சிந்திக்கும் திறன், முப்பரிமாண வெளியில் காட்சிப்படுத்தி கண்டறியும் திறன் (ability to visualize in space), எண்ணியல் திறன் போன்றவற்றை சோதித்து அறிவதாக அமையும்.

- மனத்திறன் தேர்வில் எண் தொடர்கள், எழுத்து தொடர்கள், ஆங்கில அகராதிப்படி எழுத்துக்களை வரிசைப்படுத்துதல், தனித்த எண்ணை கண்டறிதல், வென் படங்கள், ஒத்த உருவங்கள், கண்ணாடி பிம்பங்கள், குறியிடல், சிந்தனைக் கேள்விகள், கனசதுரம் அமைத்தல் போன்ற வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும். அவற்றிற்கு 4 மாற்று விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். வினாவின் பொருத்தமான விடைக்குரிய எண் உள்ள பகுதியை OMR விடைத்தாளில் கருப்பு நிற பந்துமுனைப் பேனாவால் (Ball Point Pen) முழுமையாக வண்ணம் தீட்ட வேண்டும்.
- மனத்திறன் தேர்வில் 90 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

- தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் (Negative Marks) கிடையாது.

- இத்தேர்விற்கு 90 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

- இத்தேர்வானது மாணவ, மாணவியர்கள் தங்கள் எதிர்காலத்தில் எழுதவுள்ள பல போட்டித் தேர்வுகளுக்கு (TRUST, NTSE, IBPS, SSC, TNPSC, RRB, UPSC, etc.) அடிப்படையாகவும், தூண்டுகோலாகவும் அமையும் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை. மேலும் இத்தேர்வின் மூலம் மாணவ, மாணவியரின் விரிசிந்தனை, சிக்கலுக்கு தீர்வு காணும் ஆற்றல், பகுத்தறியும் திறன் மேம்படுவதால் தங்களின் வாழ்வியல் சிக்கல்களுக்கு ஆராய்ந்து தீர்வு காணும் திறமையும் உருவாகின்றது.

பகுதி - II (படிப்பறிவுத் திறன் தேர்வு)

- படிப்பறிவுத் திறன் தேர்வானது (SAT) மாணவர்கள் பாடப்பொருளில் பெற்றுள்ள அறிவை சோதித்து அறிவதாக அமையும்.

- இத்தேர்வில் 7 ஆம் வகுப்பு அறிவியல், கணக்கு , சமூக அறிவியல் பாடங்களில் இருந்தும் (மூன்று பருவங்கள்) மற்றும் 8 ஆம் வகுப்பு அறிவியல், கணக்கு மற்றும் சமூக அறிவியல் பாடங்களில் (முதல் இரு பருவங்கள்) இருந்தும் வினாக்கள் கேட்கப்படும்.

- படிப்பறிவுத் திறன் தேர்வில் 90 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

- தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் (Negative Marks) கிடையாது.

- இத்தேர்விற்கு 90 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

Scanned by TapScanner

மதிப்பெண் பங்கீடு :

அறிவியல்	:	35	மதிப்பெண்கள்
கணக்கு	:	20	மதிப்பெண்கள்
சமூக அறிவியல்	:	35	மதிப்பெண்கள்
மொத்தம்	:	90	மதிப்பெண்கள்

மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :

- மனத்திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வு ஆகிய இரண்டும் சேர்ந்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 40% மதிப்பெண்கள் பெறுபவர்கள் தேர்வில் தகுதி பெற்றவர்களாக கருதப்படுவார்கள். SC / ST பிரிவினர் குறைந்தபட்சம் 32% மதிப்பெண்கள் பெற்றால் போதுமானது.

மாணவ / மாணவியர்கள் பெறும் உதவித்தொகை :

- மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD) நாடு முழுவதும் ஆண்டொன்றிற்கு 1,00,000 மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தலா ரூ.1000 வீதம் (வருடத்திற்கு ரூ.12000) 4 வருடங்களுக்கு ரூ.48000 அளிக்கின்றது.

- மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின்படி 6695 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு ஆண்டிலும் உள்ள தமிழ்நாட்டின் மக்கள்தொகை மற்றும் அரசு,அரசு உதவி பெறும் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை பொறுத்து மாறுபடும். தகுதி பெற்ற 6695 மாணவர்கள் மாநில இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின்படி தேர்வு செய்யப்படுவார்கள் (3% மாற்றுத்திறனாளிகள் உட்பட).

Scanned by TapScanner

தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனறித் தேர்வு
TRSTSE - Tamil Nadu Rural Students Talent Search Examination

TRSTSE தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :

- ❖ 8 ஆம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வில் 50 சதவீதம் பெற்று தற்போது 9 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வினை எழுதலாம்.

- ❖ மாணவ / மாணவியர் குடியிருப்புப் பகுதியும், அவர்கள் பயிலும் பள்ளியும் ஊரகப் பகுதியில் அமைந்திருக்க வேண்டும்.

- ❖ நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வில் கலந்து கொள்ள இயலாது.

- ❖ மாணவ / மாணவியரின் பெற்றோர் வருமானம் ரூ.1,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :

- ❖ பொதுவாக ஜூன் - ஜூலை மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும். www.dge.tn.nic.in என்ற இணையத் தள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- ❖ தற்போது தேர்வுக் கட்டணம் ரூ. 5 மற்றும் சேவைக்கட்டணம் ரூ. 10 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. **இத்தேர்வினைப் பொறுத்தவரை விண்ணப்பத்துடன் வருமானச் சான்றிதழை இணைத்து அனுப்ப வேண்டி இருப்பதால், மாணவ / மாணவியர் முன்னரே அச்சான்றிதழை பெற்று கைவசம் வைத்திருப்பது மிக அவசியம்.**

- ❖ மேலும் அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தேர்விற்கான பாடத்திட்டம் :

- ❖ இத்தேர்வில் எட்டாம் வகுப்பில் மூன்று பருவங்களில் இருந்து கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடப்பகுதி, மனத்திறன் பகுதிகளில், வினாக்கள் கேட்கப்படும்.

மதிப்பெண் பங்கீடு :

கணிதம்	:	25
அறிவியல்	:	25
சமூக அறிவியல்	:	25
மனத் திறன் பகுதி	:	25
மொத்தம்	:	100

Scanned by TapScanner

பாடப் பகுதி பங்கீடு (தோராயமாக) :

பாடம்	பிரிவு	மதிப்பெண்
கணிதம்		25
அறிவியல்	இயற்பியல் வேதியியல் தாவரவியல் விலங்கியல்	6 7 6 6
சமூக அறிவியல்	வரலாறு குடிமையியல் புவியியல்	10 5 10

மனத்திறன் பகுதி பங்கீடு (தோராயமாக) :

1) எண் தொடரில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் : 5

2) எண் / எழுத்து குறியிடல் : 5

3) படம் மற்றும் எண் தொடர்பு : 5

4) தனித்த / வேறுபட்ட எழுத்து / வார்த்தைகள் கண்டறிதல் : 5

5) தனித்த / வேறுபட்ட படம் கண்டறிதல் : 5

மொத்தம் : 25

- ❖ இத்தேர்வில் 100 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும்.
- ❖ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ❖ தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் கிடையாது.
- ❖ இத்தேர்விற்கு 150 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :

தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுள் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் 100 பேர் வீதம் (50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள்) தேர்வு செய்யப்படுவர்.

மாணவ / மாணவியர்கள் பெறும் உதவித் தொகை :

தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

Scanned by TapScanner

தேசிய அளவிலான திறனறித் தேர்வு
(NTSE - National Talent Search Examination)

நோக்கம் :

மாணாக்கர்களிடையே பொதிந்துள்ள அறிவாற்றலை வெளிக்கொணரவும், பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் இத்தேர்வுகள் உயர் நிலைக் கல்வி அளவில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணாக்கர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகின்றது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுள் திறன் வாய்ந்த மாணாக்கர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித் தொகை வழங்கி மேற்படிப்பினைத் தொடர வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

NTSE தேர்வின் நிலைகள் :

NTSE தேர்வானது இரு நிலைகளை உள்ளடக்கியது.

(1) **தேசிய அளவிலான திறனறித் தேர்வு நிலை - I (NTSE Stage - I)**

(2) **தேசிய அளவிலான திறனறித் தேர்வு நிலை – II (NTSE Stage - II)**

தேசிய அளவிலான திறனறித் தேர்வு நிலை - I : (NTSE Stage - I)

தகுதிகள் :

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில / யூனியன் பிரதேசங்களில், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வில் பங்குபெற தகுதியுடையவர்கள் ஆவர்.

தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :

- பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும்.
- **www.dge.tn.nic.in** என்ற இணையதள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- மேலும், அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

தேர்வின் பகுதிகள் :

(1) பகுதி - **I** (மனத்திறன் தேர்வு)

(2) பகுதி - **II** (படிப்பறிவுத் திறன் தேர்வு)

Scanned by TapScanner

பகுதி - I மனத்திறன் தேர்வு : (Mental Ability Test - MAT)

- ❖ மனத்திறன் தேர்விற்கென்று, தனித்த பாடத்திட்டம் ஏதும் பின்பற்றப்படுவதில்லை, இத்தேர்விலும், **NMMS - MAT** தேர்வைப் போன்றே மாணவர்களின் பகுத்தாயும் திறன், காரணம் அறியும் திறன், முப்பரிமாண வெளியில் காட்சிப்படுத்தி கண்டறியும் திறன் **(ability to visualize in space),** எண்ணியல் திறன் போன்றவற்றை சோதித்து அறிவதாக அமையும்.
- ❖ **NMMS - MAT** தேர்வைப் போன்றே இத்தேர்விலும் வினாக்கள் அமைந்திருக்கும். ஆனால் வினாக்களின் கடினத் தன்மை சற்று அதிகமாக இருக்கும்.
- ❖ இத்தேர்வில் 100 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ❖ இத்தேர்விற்கு 120 நிமிடங்கள் ஒதுக்கப்படும்

.

பகுதி - II படிப்பறிவுத் திறன் தேர்வு (Scholastic Aptitude Test - SAT)

- ❖ **SAT** தேர்வானது மாணாக்கர்கள் பாடப் பொருளில் பெற்றுள்ள திறன்களை சோதித்து அறியும் வகையில் இருக்கும்.
- ❖ இத்தேர்வில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு **STATE BOARD, CBSE, ICSE** பாடத் திட்டத்தில் இருந்து அறிவியல் (40), கணக்கு (20), சமூக அறிவியல் (40) பாடங்களில் இருந்து 100 வினாக்கள் கேட்கப்படும்.
- ❖ ஒவ்வொரு வினாவிற்கான சரியான விடைக்கும் 1 மதிப்பெண் அளிக்கப்படும்.
- ❖ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ❖ இத்தேர்விற்கு 120 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :

- ❖ இத்தேர்வில் தகுதி பெற பொதுப் பிரிவு மாணவ / மாணவியர்கள் நிலை - I ன் ஒவ்வொரு தேர்விலும் (மனத்திறன் தேர்வு , படிப்பறிவுத் திறன் தேர்வு) 40% மதிப்பெண்கள் பெற வேண்டும், **SC / ST** மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர் 32% மதிப்பெண்களும் பெற்றால் போதுமானது.

வழங்கப்படும் உதவித் தொகை விபரம் :

தேசிய திறனாய்வுத் தேர்வு நிலை - I என்பது, தேசிய அளவிலான தேசிய திறனாய்வுத் தேர்வு நிலை - II ல் பங்கேற்க நடத்தப்பெறும் தகுதித் தேர்வு மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, **NTSE** நிலை - I ல் மட்டும் தகுதி பெறும் மாணவ / மாணவியர்க்கு எவ்வித உதவித் தொகையும் வழங்கப்படுவதில்லை.

Scanned by TapScanner

தேசிய அளவிலான திறனறித் தேர்வு நிலை - II (NTSE - Stage - II)

NTSE - நிலை II தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :

இத்தேர்விற்கென்று, தேர்வர் தனியே விண்ணப்பிக்கத் தேவையில்லை. மேலும் இத்தேர்விற்கென்று எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

NTSE - நிலை II தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :

NTSE - நிலை - I ல் தகுதி பெற்ற மாணவ / மாணவியர்கள் இத்தேர்வு எழுத தகுதி பெற்றவர்களாவர்.

தேர்வின் பகுதிகள் :

- **NTSE - நிலை II** ஆனது, தேர்வின்அமைப்பைப் பொறுத்தவரையில் **NTSE - நிலை I** ஐப் போன்றே மனத்திறன் மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வு பகுதிகளை உள்ளடக்கியது. வினா அமைப்பும் **NTSE - நிலை - I** ஐப் போன்றே அமைந்திருக்கும். மனத்திறன் தேர்வில் 100 வினாக்களும், படிப்பறிவுத் திறன் பகுதியில் 100 வினாக்களும் அமைந்திருக்கும்.

- அகில இந்திய அளவில் நடைபெறும் தேர்வு என்பதால் வினாக்களின் கடினத் தன்மை மிக அதிகமாக இருக்கும்.

- **NTSE - நிலை - II** படிப்பறிவுத் திறன் தேர்வைப் பொறுத்த வரையில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு **STATE BOARD, CBSE, ICSE** பாடத் திட்டத்தில் இருந்து வினாக்கள் அமையும் என்பதால், நமது மாணவ / மாணவியர்கள் முன்னரே **CBSE / ICSE** பாடத் திட்டத்தின் படி உள்ள பாடப் பகுதிகளை அறிந்து தங்களை முழுமையாக தயார் செய்து கொள்ள வேண்டும்.

மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :

NTSE - நிலை - II ல் மனத் திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வில் தலா 40% மதிப்பெண் பெற்றும், **SC / ST** மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர் 32% மதிப்பெண்களும் பெற்றும் உள்ள மாணவர்கள் தகுதி பெற்றவர்களாக கருதப்படுவார்கள். தகுதி பெற்ற மாணவர்களுள் இரு **(MAT + SAT)** தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அகில இந்திய அளவில் தகுதி நிர்ணய மதிப்பெண்கள் **(Cut - off)** நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் அம்மதிப்பெண்கள் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 15%, பழங்குடியின பிரிவினருக்கு 7.5%, மாற்றுத் திறனாளிகளுக்கு 4% - ம், எஞ்சிய 74.5% பொதுப்பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

வழங்கப்படும் உதவித் தொகை விவரம் :

தேசிய திறனாய்வுத் தேர்வு - நிலை - **II** ல் மாணவ / மாணவியர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அகில இந்திய அளவில் 1000 மாணவ / மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படும்.

(1) மாதம் ஒன்றிற்கு ரூ. 1250 வீதம் 11 மற்றும் 12 வது வகுப்பு பயிலும் வரை.

(2) மாதம் ஒன்றிற்கு ரூ. 2000 வீதம் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் வரை.

(3) முனைவர் **(Ph.d)** பட்டப்படிப்பிற்கு **UGC** நிர்ணயித்துள்ள விகிதத்தில்.

Scanned by TapScanner

பொருளடக்கம்
(INDEX)

வ. எண்	தலைப்பு	பக்கம்
	மொழிசார் காரணம் அறிதல் (VERBAL REASONING)	
1.	எண் தொடரை நிரப்புதல் (Missing Number in the number Series)	6 - 11
2.	எழுத்து தொடரை நிரப்புதல் (Missing letter in the number Series)	12 - 15
3.	ஒப்புமை - எண்கள் (Analogy- Number)	16 - 17
4.	ஒப்புமை - எழுத்துக்கள் / வார்த்தைகள் (Analogy- Letter/Word)	18 - 23
5	மாறுபட்ட எண் / இணை எண்ணைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Number / Pair or Numbers)	24 - 25
6.	மாறுபட்ட எழுத்து / வார்த்தையைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Letters / Words)	26 - 30
7.	வடிவியல் உருவங்களின் எண்ணிக்கையைக் கண்டறிதல் (Counting the Geometrical figures)	31 - 44
8.	வென் படங்கள் (Venn Diagrams)	45 - 50
9.	எண் / எழுத்து குறியிடல் (Number / Letter Counting)	51 - 56
10.	குறியீட்டின் பொருள் அறிதல் (Decoding)	57 - 64
11.	படங்களில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் (Missing Number in the figure)	65 - 69
12.	படங்களில் விடுபட்ட எழுத்தை நிரப்புதல் (Missing Letter in the figure)	70 - 72
13.	செருகப்பட்ட படங்கள் - எண் / எழுத்து விபரங்கள் (Inserted figures - Number / Letter details)	73 - 81
14.	வார்த்தைக்குள் அமைந்த வார்த்தை (Word within the Word)	82 - 83
15.	வார்த்தைக்குள் அமையாத வார்த்தை (Word can not be formed in the Word)	84 - 85
16.	ஆங்கில அகராதி வரிசைப்படி வார்த்தைகளை வரிசைப்படுத்துதல் (Arrangement of Letters as in English Dictionary)	86 - 88
17.	எண் அணிகள் (Number Matrix)	89 - 91
18.	எண்கள், குறிகள் மற்றும் குறியீடுகள் (Number, Signs and symbols)	92 - 99
19.	எண் தொடரில் உள்ள தவறான எண்ணைக் கண்டறிதல் (Finding wrong number in the Number Series)	100 - 101

Scanned by TapScanner

பொருளடக்கம்
(INDEX)

வ. எண்	தலைப்பு	பக்கம்
20.	எண்ணியல் கணக்குகள் (Numerical Problems)	102 - 111
21.	சூழ்நிலைக் கணக்குகள் (Situation Related Problems)	112 - 132
22.	உறவுமுறைக் கணக்குகள் (Blood Relationship Problems)	133 - 141
23.	திசைகள் சார்ந்த கணக்குகள் (Directions Related Problems)	142 - 152
24.	காலம் சார்ந்த கணக்குகள் (Time Related Problems)	153 - 161
25.	புதிர் கணக்குகள் (Puzzle Problems)	162 - 170
26.	தரம் சார்ந்த கணக்குகள் மற்றும் எண்/எழுத்து அறிவைச் சோதித்தல் (Ranking Test and Number/Letter Test)	171 - 177
27.	வார்த்தைகளை பொருள்பட வரிசைப்படுத்துதல் (Legal Sequence of words)	178 - 179
28.	பகடைக் கணக்குகள் (Dice Problems)	180 - 187
29.	கன சதுரக் கணக்குகள் (Cube Problems)	188 - 197
	மொழிசாரா காரணம் அறிதல் (NON VERBAL REASONING)	
30.	உருவ / பட வரிசையை நிரப்புதல் (Completing the figural Series)	198 - 201
31.	ஒப்புமை - படங்கள் (Analogy - Figures)	202 - 204
32.	மாறுபட்ட படத்தைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Figure)	205 - 207
33.	கண்ணாடி பிம்பங்கள் (Mirror images)	208 - 210
34.	நீர் பிம்பங்கள் (Water Images)	211 - 213
35.	மறைந்திருக்கும் உருவங்களைக் கண்டறிதல் (Hidden / Embedded Figures)	214 - 216
36.	படத்தில் உள்ள விடுபட்ட பகுதியை நிரப்புதல் (Complete the Missing Part of the image)	217 - 220

Scanned by TapScanner

விடைப் பகுதி

வ. எண்	தலைப்பு	பக்கம்
	மொழிசார் காரணம் அறிதல் (VERBAL REASONING)	
1.	எண் தொடரை நிரப்புதல் (Missing Number in the number Series)	222 - 226
2.	எழுத்து தொடரை நிரப்புதல் (Missing leter in the number Series)	227 - 229
3.	ஒப்புமை - எண்கள் (Analogy- Number)	230 - 231
4.	ஒப்புமை - எழுத்துக்கள் / வார்த்தைகள் (Analogy- Letter/Word)	232 - 238
5	மாறுபட்ட எண் / இணை எண்ணைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Number / Pair or Numbers)	239 - 242
6.	மாறுபட்ட எழுத்து / வார்த்தையைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Letters / Words)	243 - 250
7.	வடிவியல் உருவங்களின் எண்ணிக்கையைக் கண்டறிதல் (Counting the Geometrical figures)	251 - 260
8.	வென் படங்கள் (Venn Diagrams)	261 - 264
9.	எண் / எழுத்து குறியிடல் (Number / Letter Counting)	265 - 268
10.	குறியீட்டின் பொருள் அறிதல் (Decoding)	269 - 276
11.	படங்களில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் (Missing Number in the figure)	277 - 285
12.	படங்களில் விடுபட்ட எழுத்தை நிரப்புதல் (Missing Letter in the figure)	286 - 290
13.	செருகப்பட்ட படங்கள் - எண் / எழுத்து விபரங்கள் (Inserted figures - Number / Letter details)	291 - 295
14.	வார்த்தைக்குள் அமைந்த வார்த்தை (Word within the Word)	296 - 298
15.	வார்த்தைக்குள் அமையாத வார்த்தை (Word can not be formed in the Word)	299 - 301
16.	ஆங்கில அகராதி வரிசைப்படி வார்த்தைகளை வரிசைப்படுத்துதல் (Arrangement of Letters as in English Dictionary)	302 - 306
17.	எண் அணிகள் (Number Matrix)	307 - 311
18.	எண்கள், குறிகள் மற்றும் குறியீடுகள் (Number, Signs and symbols)	312 - 315
19.	எண் தொடரில் உள்ள தவறான எண்ணைக் கண்டறிதல் (Wrong number in the Number Series)	316 - 318

Scanned by TapScanner

விடைப் பகுதி

வ. எண்	தலைப்பு	பக்கம்
20.	எண்ணியல் கணக்குகள் (Numerical Problems)	319 - 323
21.	சூழ்நிலைக் கணக்குகள் (Situation Related Problems)	324 - 331
22.	உறவுமுறைக் கணக்குகள் (Blood Relationship Problems)	332 - 337
23.	திசை சார்ந்த கணக்குகள் (Direction Related Problems)	338 - 344
24.	காலம் சார்ந்த கணக்குகள் (Time Related Problems)	345 - 349
25.	புதிர் கணக்குகள் (Puzzle Problems)	350 - 355
26.	தரம் சார்ந்த கணக்குகள் மற்றும் எண்/எழுத்து அறிவைச் சோதித்தல் (Ranking Test and Number/Letter Test)	356 - 358
27.	வார்த்தைகளை பொருள்பட வரிசைப்படுத்துதல் (Legal Sequence of words)	359
28.	பகடைக் கணக்குகள் (Dice Problems)	360 - 368
29.	கன சதுரக் கணக்குகள் (Cube Problems)	369 - 378
	மொழிசாரா காரணம் அறிதல் (NON VERBAL REASONING)	
30.	உருவ / பட வரிசையை நிரப்புதல் (Completing the figural Series)	379
31.	ஒப்புமை – படங்கள் (Analogy - Figures)	379
32.	மாறுபட்ட படத்தைத் தேர்ந்தெடுத்தல் (Odd one out - Figure)	379
33.	கண்ணாடி பிம்பங்கள் (Mirror images)	379
34.	நீர் பிம்பங்கள் (Water Images)	379
35.	மறைந்திருக்கும் உருவங்களைக் கண்டறிதல் (Hidden / Embedded Figures)	379
36.	படத்தில் உள்ள விடுபட்ட பகுதியை நிரப்புதல் (Complete the Missing Part of the image)	379

Scanned by TapScanner

1. எண் தொடரை நிரப்புதல்

(Missing Number in the Number Series)

இவ்வகையில், எண் தொடரை கூர்ந்து ஆராய்ந்து, அவ்வரிசையில் உள்ள எண்களின் பொதுத்தன்மையைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் அடுத்துவரும் எண்ணை கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் இருந்து தேர்வு செய்ய வேண்டும்.

வகைகள் :

1) சிறப்பு எண்களின் எண் தொடர்

2) இரட்டைத்தொடர்

3) முத்தொடர்

4) இடைவெளி காணும் வகையில் அமையும் எண் தொடர்

5) கூட்டி எழுதும் வகையில் அமையும் எண் தொடர்

அ) Fibonacci தொடர்

ஆ) மூன்று எண்களின் கூட்டல் தொடர்

(1) சிறப்பு எண்களின் எண் தொடர்

அ) ஒற்றை எண்களின் எண் தொடர் - 1,3,5,7,9,.....

(எ.கா)

61, 63, 65, 67, 69, ?

(1) 68 (2) 70 (3) 71 (4) 72

61, 63, 65, 67, 69, [71]

+2 +2 +2 +2 +2

(ஆ) இரட்டை எண்களின் எண் தொடர் - 2,4,6,8,10,.....

(எ.கா)

84, 82, 80, 78, 76, ?

(1) 78 (2) 74 (3) 72 (4) 80

84 82 80 78 76 [74]

-2 -2 -2 -2 -2

(இ) பகா எண்களின் எண் தொடர்

11, 13, 17, 19, ?

(1) 21 (2) 20 (3) 23 (4) 22

11 13 17 19 [23]

பகா எண்களின் தொடராக எழுதப்பட்டுள்ளது, 19 ஐ அடுத்த பகா எண் 23

Scanned by TapScanner

(ஈ) பகு எண்களின் எண் தொடர் : 4,6,8,9,10.....

32, 33, 34, 35, 36, ?

(1) 38 (2) 39 (3) 40 (4) 41

32, 33, 34, 35, 36,..... என்ற தொடரானது பகு எண்களின் தொடராக எழுதப்பட்டுள்ளது. எனவே, 36 ஐ அடுத்த பகு எண் **38** ஆகும்

(ஊ) வர்க்க எண்களின் எண் தொடர் : 1,4,9,16,25,36.....

4, 16, 36, 64, ?

(1) 81 (2) 49 (3) 100 (4) 72

4, 16, 36, 64 என்பது முறையே 2,4,6,8,ன் வர்க்கமாகும், எனவே அடுத்து வரும் எண் 10-ன் வர்க்கமான 100 ஆகும்.

(ஊ) கன எண்களின் எண் தொடர்: 1,8,27,64,125.....

729, 512, 343, 216, ?

(1) 343 (2) 81 (3) 125 (4) 64

729, 512, 343, 216.. என்ற எண்கள் முறையே 9,8,7,6-ன் கன எண்களாகும், எனவே அடுத்து வரும் எண் 5-ன் கன எண்ணான **125** ஆகும்.

2. இரட்டைத் தொடர் :

(எ.கா: 1)

1, 8, 4, 27, 9, 64, 16, 125, 25, ?

(1) 36 (2) 343 (3) 216 (4) 150



6^3 = **216**

(எ.கா: 2)

160 5, 80, 10, 40, 20, 20, 40, 10, 80, ?

(1) 20 (2) 0 (3) 1 (4) 5



3. இடைவெளி காணும் வகையில் அமையும் எண் தொடர் :

(எ.கா.1)

10, 11, 13, 16, 20, 25, 31, ?

(1) 35 (2) 37 (3) 36 (4) 38

10, 11, 13 16, 20, 25, 31, **38**

+1 +2 +3 +4 +5 +6 +7

Scanned by TapScanner

(எ.கா: 2)

3, 4, 8, 17, 33, 58, ?

(1) 36 (2) 84 (3) 94 (4) 78

3, 4, 8, 17, 33, 58, **94**

+1 +4 +9 +16 +25 +36

(1^2) (2^2) (3^2) (4^2) (5^2) (6^2)

(எ.கா: 3)

2, 4, 12, 48, 240, ?

(1) 1440 (2) 1200 (3) 1680 (4) 1400

2, 4, 12, 48, 240, **1440**

x2 x3 x4 x5 x6

4. கூட்டி எழுதும் வகையில் அமையும் எண் தொடர்:

1) Fibonacci தொடர்

முதல் எண் + இரண்டாம் எண் = மூன்றாம் எண் ; இரண்டாம் எண்+மூன்றாம் எண் = நான்காம் எண் ..... என்றவாறு அமைந்த தொடர்.

(எ.கா)

1, 2, 3, 5, 8, 13, 21, ?

(1) 27 (2) 29 (3) 33 (4) 34

1 + 2 = 3 ; 2 + 3 = 5 ; 3 + 5 = 8 ; 5 + 8 = 13 ; 8 + 13 = 21 ; 13 + 21 = **34**

(2) மூன்று எண்களின் கூட்டல் தொடர்:

முதல் எண் + இரண்டாம் எண் + மூன்றாம் எண் = நான்காம் எண்,

இரண்டாம் எண் + மூன்றாம் எண் + நான்காம் எண் = ஐந்தாம் எண் ..... என்றவாறு அமைந்த தொடர்.

(எ.கா)

0, 1, 1, 2, 4, 7, 13, 24, 44, ?

(1) 80 (2) 82 (3) 81 (4) 79

0 + 1 + 1 = 2 ; 1 + 1 + 2 = 4 ; 1 + 2 + 4 = 7 ; 2 + 4 + 7 = 13 ; 4 + 7 + 13 = 24 ;

7 + 13 + 24 = 44 ; 13 + 24 + 44 = **81**

Scanned by TapScanner

நினைவிற் கொள்க :

எண் (n)	அடுக்குகள்				
	(n^1)	வர்க்கம் (n^2)	கனம் (n^3)	(n^4)	(n^5)
1	1	1	1	1	1
2	2	4	8	16	32
3	3	9	27	81	243
4	4	16	64	256	1024
5	5	25	125	625	3125
6	6	36	216	1296	7776
7	7	49	343	2401	16807
8	8	64	512	4096	32768
9	9	81	729	6561	59049
10	10	100	1000	10000	100000
11	11	121			
12	12	144			
13	13	169			
14	14	196			
15	15	225			
16	16	256			
17	17	289			
18	18	324			
19	19	361			
20	20	400			

Fibonacci Series :

"Fibonacci Series" என்பது, முதல் எண்; இரண்டாம் எண்; முதல் எண்+ இரண்டாம் எண் = மூன்றாம் எண்; இரண்டாம் எண் + மூன்றாம் எண் = நான்காம் எண்... என்றவாறு தொடர் அமைக்கப்பட்டிருக்கும்.

(எ.கா)

3, 7, 10, 17, 27

3+7=10, 7+10=17, 10+17=27

Tri Series :

"Tri Series" என்பது, முதல் எண்; இரண்டாம் எண்; மூன்றாம் எண்; முதல் எண் + இரண்டாம் எண் + மூன்றாம் எண் = நான்காம் எண்; இரண்டாம் எண் + மூன்றாம் எண் + நான்காம் எண் = 5ம் எண்... என்றவாறு தொடர் அமைக்கப்பட்டி ருக்கும்.

(எ.கா)

1, 2, 3, 6, 11, 20

1+2+3=6, 2+3+6=11, 3+6+11=20

Factorial :

1 ! = 1 × 1 = 1

2 ! = 2 × 1 = 2

3 ! = 3 × 2 × 1 = 6

4 ! = 4 × 3 × 2 × 1 = 24

5 ! = 5 × 4 × 3 × 2 × 1 = 120

6 ! = 6 × 5 × 4 × 3 × 2 × 1 = 720

7 ! = 7 × 6 × 5 × 4 × 3 × 2 × 1 = 5040

பகு எண்கள் :

இரண்டிற்கு மேற்பட்ட வகுத்திகளை கொண்டவை. எகா. 4, 6, 8, 9, 10, 12, 14, 15,

பகா எண்கள் :

இரண்டு வகுத்திகளை மட்டுமே கொண்டவை. எகா. 2, 3, 5, 7, 11, 13, 17, 19, etc

சார்பகா எண்கள் :

இரு எண்களின் மீ.பொ.வ (G.C.D) =1 எனில் அவ்விரு எண்களும் சார்பகா எண்கள் எனப்படும். எகா. (2,3) ; (4,5) ; (5,6) ; (6,7) ; (7,8)

Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

வழிமுறை : (வினா எண். 1 – 50)

கீழ்க்காணும் வினாக்களில் எண்கள் ஒரு குறிப்பிட்டவிதியின்படிவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கேள்விக்குறி (?) இடப்பட்டுள்ள இடத்தில் சரியாக பொருந்தக்கூடிய எண்ணினை கொடுக்கப் பட்டுள்ள 4 மாற்று விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

Find the missing number in the Number Series.

1. 4,5,7,10,11,13,16,17,?,22
   1) 18 2) 19
   3) 20 4) 21

2. 625, 5,125, 25,?,125
   1) 5 2) 25
   3) 125 4) 625

3. 3,7,15,?,63,127
   1) 30 2) 31
   3) 47 4) 52

4. 1,1,16,4,25,5,36,6,?,11
   1) 121 2) 112
   3) 211 4) 111

5. 53,59,61,67,?,73, 79,83
   1) 74 2) 69
   3) 71 4) 68

6. 9,19,39,79,159,?,639
   1) 139 2) 309
   3) 259 4) 319

7. 12,15,36,45,108,?,324
   1) 100 2) 135
   3) 125 4) 110

8. 12,32,72,152,?,632
   1) 352 2) 254
   3) 270 4) 312

9. 8,19,32,47, ____
   1) 64 2) 62
   3) 61 4) 66

10. 1,5,3,10,9,20,27,40,___
    1) 81 2) 80
    3) 91 4) 67

11. 4,6,8,15,16,24,32,33,64,?
    1) 64 2) 42
    3) 55 4) 48

12. 5,6,8,11,15,20,?
    1) 31 2) 25
    3) 26 4) 46

13. 1,4,9,16,25,?
    1) 64 2) 81
    3) 49 4) 36

14. 1,1,2,3,5,8,13,21,?
    1) 34 2) 30
    3) 29 4) 37

15. 1,1,4,8,9,27,16,64,_, ,_
    1) 36,216 2) 49,343
    3) 25,125 4) 16,64

16. 0,3,8,15,24,_
    1) 80 2) 48
    3) 63 4) 35

17. 9,28,65,?,217
    1) 126 2) 115
    3) 116 4) 124

18. 36,4,18,8,9,16,?
    1) 18 2) 32
    3) 8 4) 9/2

19. 11,12,20,47,?
    1) 91 2) 101
    3) 111 4) 121

20. 5,7,10,15,22,?
    1) 31 2) 33
    3) 35 4) 37

21. 2,3,5,8,13,21,?
    1) 34 2) 29
    3) 30 4) 32

22. 10,16,26,42,?,110
    1) 58 2) 68
    3) 38 4) 48

23. 8,15,24,?,48,63
    1) 33 2) 35
    3) 30 4) 38

Scanned by TapScanner

24. 19,23,29,31,?
1) 37 2) 33
3) 35 4) 39

25. 14,18,20,14,27,11,?,9
1) 12 2) 35
3) 33 4) 8

26. 16,1,8,3,4,9,?,27
1) 6 2) 2
3) 1 4) 4

27. 50,6,8,40,18,13,30,?,18,20,42
1) 20 2) 30
3) 13 4) 18

28. 2,8,18,32,?
1) 9 2) 50
3) 64 4) 16

29. 999,728,511,_____
1) 342 2) 343
3) 311 4) 340

30. 165,146,?,116,105
1) 129 2) 157
3) 124 4) 127

31. 5,6,9,18,?,126,369
1) 26 2) 27
3) 45 4) 36

32. 48,32,24,20,?
1) 16 2) 18
3) 81 4) 15

33. 3,6,12,?,33
1) 19 2) 18
3) 24 4) 21

34. 72,68,60,48,32,?
1) 22 2) 14
3) 12 4) 8

35. ?,4,12,39,103
1) 1 2) 2
3) 3 4) 10

36. 120,119,111,84,?
1) 20 2) 57
3) 19 4) 76

37. 15,14,12,9,?
1) 6 2) 3
3) 8 4) 5

38. -7,-8,-10,-13,?
1) -14 2) -17
3) -20 4) -15

39. 16, 49,100,169, ?
1) 196 2) 225
3) 265 4) 256

40. 1,1, 2, 8, 3, 27, 4, ?
1) 5 2) 16
3) 64 4) 20

41. 28, 66,128, ?
1) 216 2) 220
3) 121 4) 182

42. 840, 210, 42, 7, ?
1) 0 2) 1
3) 294 4) 49

43. 4/5, 8/15,16/45, ?, 64/405
1) 32/90 2) 32/135
3) 16/135 4) 64/90

44. 160, 80,120, 300, ?
1) 1050 2) 1000
3) 1040 4) 1020

45. 0, 2, 8, 14, ?, 34
1) 24 2) 27
3) 22 4) 16

46. 13,17, 33, 97, ?,1377
1) 353 2) 256
3) 563 4) 455

47. 24,28,19,35,10,?
1) 45 2) 46
3) 44 4) 47

48. 14, 6, 4, 4, 8, ?
1) 32 2) 8
3) 4 4) 16

49. 17,18,14, 23, 7, ?
1) 31 2) 32
3) 33 4) 34

50. 18, 8, 6, 8, 24, ?
1) 6 2) 48
3) 176 4) 167

Scanned by TapScanner

2. எழுத்துத் தொடரை நிரப்புதல்

(Missing Letter in the Series)

இவ்வகையில் ஆங்கில எழுத்ததுத்தொடரின் சீரான பொதுத்தன்மையைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் விடுபட்ட இடங்களில் இடம் பெறும் எழுத்துக்களைக் கண்டறிய வேண்டும்.

வகை : I

ஆங்கில எழுத்துக்களின் சுழற்சி/தொடர் அடிப்படையில் அமையும் எழுத்துத் தொடர்கள்:

1. இரண்டெழுத்துத் தொடர் - ab / ab / ab / ab /ab .....
2. மூன்றெழுத்துத் தொடர் - xyz / xyz / xyz / xyz / xyz.....
3. நான்கெழுத்துத் தொடர் - abcd / abcd / abcd / abcd / abcd / .....
4. ஏறுவரிசைத் தொடர் - ab / abb / abbb / abbbb / abbbbb.....
   - lm / lmn / lmno / lmnop.....
   - ab / abc / abcd / abcde/ abcdef.....
5. இரண்டெழுத்து சுழற்சித் தொடர் - ab / ba / ab / ba / ab / ba.....
6. மூன்றெழுத்து சுழற்சித் தொடர் - abc / bca / cab / abc.....
7. அந்தாதித் தொடர் - ijk / klm / mno / opq.....

Tips & Tricks

இவ்வகை வினாக்களில், மாற்று விடைகளை ஒவ்வொன்றாக கோடிட்ட இடங்களில் பொருத்திப் பார்த்து எளிதில் விடைகளை கண்டறிய இயலும்

(எ.கா: 1)

b _ _ a b a b a _ a b _ என்ற தொடரில் விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி தொடரை பூர்த்தி செய்க.

1) a b a b 2) a b b a 3) a b b b 4) b a b b

விடை:

b **a** / **b** a / b a / b a/ **b** a / b **a** **2) a b b a**

(எ.கா: 2)

b c _ b _ c _ b _ c c b

1) b b c b 2) c b c b 3) b c b c 4) c b b c

விடை:

b c **c** b / **b** c **c** b / **b** c c b **2) c b c b**

Scanned by TapScanner

வகை : II

ஆங்கில எழுத்துக்களில் சில எழுத்துக்கள் விட்டு எழுதப்பட்டு அமையும் எழுத்துத் தொடர்கள்:

இவ்வகையான வினாக்களை தீர்ப்பதற்கு ஆங்கில எழுத்துக்களின் வரிசை (இடமிருந்து வலம் மற்றும் வலமிருந்து இடம்) தெரிந்து வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் எளிமையாக விடையளிக்க இயலும்.

(எ.கா. 1)

A, B, D, G, K, ?

1) M 2) P 3) O 4) Q

விடை:



(எ.கா. 2)

B D F, G I K, L N P, ?

1) Q S U 2) Q R T 3) Q R S 4) Q S T

விடை:



(எ.கா. 3)

A1, C4, F9, K16, ?

1) Q25 2) R64 3) S25 4) R25

விடை:



Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

வழிமுறை : (வினா எண். 1 - 30)

கீழ்க்காணும் வினாக்களில் எழுத்துக்கள் ஒரு குறிப்பிட்ட விதியின்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கேள்விக்குறி (?) அல்லது (-) இடப்பட்டுள்ள இடத்தில் சரியாக பொருந்தக்கூடிய எழுத்தை கொடுக்கப் பட்டுள்ள 4 மாற்று விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

Find the missing letter in the series.

1. a a b _ a a _ b b b _ a a a _ b b b

1) a b a b 2) b a a b
3) a a a b 4) a b b a

2. _ b b c c c _ _ d d e e e e _

1) b c d e 2) b c c e
3) a c d e 4) a d d e

3. a b _ _ c a c a _ a _ c

1) a b a b 2) c b a b
3) c b b b 4) c b b a

4. a _ a b _ a b _ d a _ c d e

1) b b b b 2) b c c b
3) b b c b 4) b c b b

5. p _ p _ q _ p _ p _ q q

1) q p q q p 2) p p q p q
3) q p q p q 4) q p q q q

6. a b _ _ b a a _ _ a b _

1) a a a a a 2) a a a b a
3) a a b a a 4) b a a b b

7. r _ _ s s r _ s s r s _ s s

1) s r s r 2) s r r s
3) s r s s 4) s s r s

8. m n _ m _ o _ n o m _ o

1) o m n m 2) o n m m
3) o n m n 4) o n n m

9. a _ b _ b c _ c c d _ d d d

1) a b c c 2) a b c d
3) b c c d 4) a b d c

10. a _ a _ b b c _ c d _ d

1) b b d c 2) b b c d
3) a a c d 4) a b c d

11. a _ b b b _ a _ b b b a _ a b

1) a a a a 2) b b b b
3) a b a b 4) a a b b

12. m _ _ p n o _ _ o p m n

1) n o p m 2) m n o p
3) o n m m 4) n o p p

13. A, D, H, M, ?, Z

1) B 2) G
3) S 4) N

14. DFI, KMP, ?, YAD

1) QSV 2) RTW
3) SUX 4) RTV

Scanned by TapScanner

15. ABC, FGH, LMN, ?

1) IJK 2) OPQ
3) RST 4) STU

16. M3, O5, R7, T9, W11, ?

1) Z13 2) X13
3) Y13 4) X15

17. B, E, I, N, T, ?

1) Z 2) A
3) Y 4) G

18. D-16, F-36, H-64, ?

1) I-81 2) I-100
3) J-81 4) J-100

19. DZ, EY, FX, GW, ?

1) HV 2) HU
3) IT 4) IR

20. KJI, MLK, ONM, ?, SRQ, UTS

1) PQR 2) QOP
3) QPO 4) ONP

21. DEF, HIJ, MNO, ?

1) RST 2) RTV
3) STU 4) TUV

22. AZ, BY, CX, DW, ?

1) EV 2) VE
3) EU 4) FW

23. A, D, I, P, ?

1) Y 2) W
3) U 4) X

24. Y, J, X, K, W, L, V, M, ?, ?

1) N, U 2) W, O
3) U, N 4) O,U

25. AB, DEF, HIJK, ?, STUVWX

1) LMNOPQ 2) LMNOP
3) MNOPQ 4) QRSTU

26. Y, S, W, V, ?, ?, S, B, Q, E

1) U, V 2) U, Y
3) S, E 4) Y,T

27. A, K, E, O, I, S, ?, ?, Q, U

1) I, V 2) M, W
3) N, X 4) I, W

28. AZ, CX, EV, ?

1) GS 2) HT
3) GT 4) HU

29. X, U, R, O, L, ?

1) M 2) J
3) K 4) I

30. KPA, LQB, MRC, NSD, ?

1) TOE 2) ETO
3) OET 4) OTE

Scanned by TapScanner

3. ஒப்புமை - எண்கள்
(Analogy - Numbers)

இவ்வகையில் ': :' என்ற குறியீட்டிற்கு முன் / பின் இரு எண்கள் எழுதப்பட்டிருக்கும். அவ்விரு எண்களுக்குள் ஏதேனும் ஒரு தர்க்கவியல் தொடர்பு (Logical relationship) இருக்கும். அந்தத் தொடர்பை பிரதிபலிக்கும் வகையில் ': :' என்ற குறியீட்டிற்கு முன் பின் வரும் எண்கள் அமைய வேண்டும். அதில் ஏதேனும் ஒரு எண் விடுபட்டிருக்கும். அந்த விடுபட்ட எண்ணை கண்டறியவேண்டும்.

(எ.கா:1)

4 : 16 :: 8 : ?
1) 64 2) 16 3) 32 4) 46

4 : 16 :: 8 : ?
4 : 4^2 :: 8 : 8^2
8^2 = 64

(எ.கா:2)

17 : 119 :: 13 : ?
1) 91 2) 95 3) 89 4) 84

17 : 119 :: 13 : ?
17 : 17 x 7 :: 13 : 13 x 7
13 x 7 = 91

(எ.கா:3)

3 : 12 :: 7 : ?
1) 42 2) 49 3) 55 4) 56

3 : 12 :: 7 : ?
3 : 3 x (3+1) :: 7 : 7 x (7+1)
3 : 3 x 4 :: 7 : 7 x 8
3 : 12 :: 7 : 56

(எ.கா:4)

30 : 42 :: ? : 90
1) 49 2) 64 3) 72 4) 81

30 : 42 :: ? : 90
6^2 - 6 : 7^2 - 7 :: 9^2 - 9 : 10^2 - 10
36 - 6 : 49- 7 :: 81 - 9 : 100 - 10
30 : 42 :: 72 : 90

Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

வழிமுறை : (வினா எண் 1 – 25)
ஒவ்வொரு வினாவிலும் ? குறியிட்ட இடத்தை கொடுக்கப்பட்டுள்ள 4 மாற்று விடைகளில் இருந்து நிறைவு செய்ய வேண்டும்

1. 5 : 25 :: 9 : ?
1) 18 2) 29
3) 81 4) 90

2. 3/4 : 64/9 :: 5/6 : ?
1) 216/25 2) 216/64
3) 216/125 4) 125/13

3. 10 : 25 :: 18 : ?
1) 45 2) 64
3) 72 4) 81

4. 56 : 29 :: 38 : ?
1) 10 2) 18
3) 20 4) 21

5. 12 : 169 :: 14 : ?
1) 196 2) 144
3) 225 4) 121

6. 27 : 9 :: 64 : ?
1) 16 2) 32
3) 8 4) 4

7. CD : 34 :: JK : ?
1) 1110 2) 910
3) 1011 4) 119

8. 12 : 68 :: 30 : ?
1) 176 2) 180
3) 218 4) 222

9. 3 : 27 :: 4 : ?
1) 4 2) 18
3) 64 4) 36

10. 5 : 27 :: 7 : ?
1) 51 2) 31
3) 41 4) 49

11. 6 : ? :: 60 : 120
1) 12 2) 24
3) 30 4) 36

12. 11 : 30 :: ? : 128
1) 65 2) 66
3) 67 4) 68

13. 75 : 375 :: ? : 225
1) 15 2) 25
3) 35 4) 45

14. 144 : 441 :: 169 : ?
1) 961 2) 916
3) 619 4) 196

15. 7 : 196 :: 8 : ?
1) 224 2) 256
3) 272 4) 324

16. 20 : 11 :: 102 : ?
1) 48 2) 52
3) 25 4) 16

17. 20 : 16 :: 30 : ?
1) 49 2) 36
3) 25 4) 16

18. 12 : 35 :: 16 : ?
1) 63 2) 55
3) 47 4) 32

19. 7/48 : 9/80 :: ? : 98/999
1) 10/99 2) 100/999
3) 98/963 4) 98/965

20. 1 : 1 :: 10 : ?
1) 1000 2) 10
3) 1 4) 20

21. $\sqrt{25}$: 125 :: $\sqrt{100}$: ?
1) 100 2) 75
3) 1000 4) 200

22. 2 : 16 :: 4 : ?
1) 36 2) 32
3) 64 4) 128

23. 8 : 3 :: 22 : ?
1) 9 2) 19
3) 11 4) 10

24. 36 : 213 :: 16 : ?
1) 62 2) 61
3) 51 4) 71

25. 81 : 59043 :: 16 : ?
1) 1018 2) 1013
3) 1026 4) 1023

Scanned by TapScanner

4. ஒப்புமை - எழுத்துக்கள் / வார்த்தைகள்
(Analogy - Letters / Words)

இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட தொடர்பு கொடுக்கப்பட்டு, அதே தொடர்பைப் பிரதிபலிக்கும் மற்றொரு தொடர்பை மாற்று விடைகளிலிருந்து கண்டறிவதே ஆகும். "ஒப்புமை" ஆனது, ஒருவரின் ஒட்டுமொத்த அறிவையும், காரணம் அறியும் திறனையும், ஒரு நிகழ்வை அதனை ஒத்த மற்றொரு நிகழ்வுடன் துல்லியமாக பொருத்திப் பார்க்கும் திறனையும் சோதித்து அறியும் வண்ணம் இருக்கும்.

வகை :

I) வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்த ஒப்புமை

II) ஆங்கில எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த ஒப்புமை

(I) வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்த ஒப்புமை :-

i) ஒப்புமை ஜோடிகளில் விடுபட்ட வார்த்தையை நிரப்புதல் :-

இவ்வகையில் ": :" என்ற குறியீட்டிற்கு முன் / பின் இரு வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கும். அவ்விரு வார்த்தைகளுக்குள் ஏதேனும் ஒரு தர்க்கவியல் தொடர்பு (Logical relationship) இருக்கும். அந்தத் தொடர்பை பிரதிபலிக்கும் வகையில் ": :" என்ற குறியீட்டிற்கு முன் / பின் வரும் வார்த்தைகள் அமைய வேண்டும். அதில் ஏதேனும் ஒரு வார்த்தை விடுபட்டிருக்கும். அந்த விடுபட்ட வார்த்தையைக் கண்டறிய வேண்டும்.

(எ.கா:1)

News paper : Press : : Cloth : ?

1) Tailor 2) Textile 3) Fibre 4) Mill

Newspaper ஆனது Press-ல் தயார் செய்யப்படும். இதே போல்,
Cloth ஆனது Mill-ல் தயார் செய்யப்படும்.

ii) நேரடி / எளிய ஒப்புமை :-

இவ்வகையில் இரு வார்த்தைகள் நேரடியாக வார்த்தைகளால் தொடர்பு படுத்தப்பட்டிருக்கும்.

(எ.கா:1)

'Tennis' உடன் தொடர்புடையது 'Court' எனில், அதே போன்று,
'Boxing' உடன் தொடர்புடையது?

1) Pool 2) Ring 3) Arena 4) Stadium

'Tennis'விளையாடும் இடம் 'Court' என அழைக்கப்படும். அதே போன்று, 'Boxing' விளையாடும் இடம் 'Ring' ஆகும்.

Scanned by TapScanner

iii) ஒப்புமை ஜோடியைத் தேர்ந்தெடுத்தல் :-

இவ்வகையில் ஒரு ஜோடி வார்த்தைகள் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த ஜோடியில் உள்ள தொடர்பை பிரதிபலிக்கும் வகையில் அமைந்த "ஜோடியை" மாற்று விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

(எ.கா:1)

Energy : Joule : : ?

1) Axe : Grind 2) Ammeter : Current 3) Power : Amphere 4) Resistance : Ohm

ஆற்றலின் (Power) அலகு ஜுல். இதைப்போல்,
மின் தடையின் (Resistance) அலகு ohm.

iv) தொடர்புடைய வார்த்தையைத் தேர்ந்தெடுத்தல் :-

இவ்வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று அல்லது நான்கு வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதனுடன் தொடர்புடைய மற்றொரு வார்த்தையை மாற்று விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

(எ.கா)

Liver : Kidney : Heart

1) Blood 2) Nose 3) Lung 4) Urine

Liver, Kidney, Heart ஆகிய மூன்றும் மனித உள் உறுப்புகள். எனவே, அதனுடன் தொடர்புடைய உள் உறுப்பான " Lung " என்பதே சரியான விடையாகும்.

2) ஆங்கில எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த ஒப்புமை :-

இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட ஆங்கில எழுத்துக்களின் ஜோடி கொடுக்கப்பட்டிருக்கும். அந்த ஜோடியில் உள்ள எழுத்துக்களில் உள்ள தொடர்பைப் பிரதிபலிக்கும் வகையில் மற்றொரு ஜோடி அமைந்திருக்கும். அதனை மாற்று விடைகளில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

(எ.கா)

AG : IO : : EK : ?

1) SM 2) MS 3) NS 4) GS



ஒப்புமை-வார்த்தைகளில் கொடுக்கப்படும் இரு ஜோடி வார்த்தைகளுக்கான தொடர்பு பின்வருமாறு அமைய வாய்ப்புள்ளது. இது போன்ற வினாக்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே கேட்கப்படுவதால், மாணவர்கள் ஆங்கில கலைச்சொற்களை நன்கு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான், அவைகளுக்கு இடையோன ஒப்புமையைக் கண்டறிய இயலும்.

Scanned by TapScanner

ஒரு சில தர்க்கவியல் தொடர்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. நாடு : தலைநகரம்
2. நாடு : நாணயம்
3. ஆண்பால் : பெண்பால்
4. தனிநபர் : குழு
5. விலங்கு : குட்டி
6. தனிநபர் : வகுப்பு
7. விலங்கு : குழு
8. தனிநபர் : வாழுமிடம்
9. விளையாடு : விளையாட்டிடம்
10. வேலையாள் : கருவி
11. கருவி : செயல்
12. உருவாக்குபவர் : உற்பத்திப் பொருள்
13. பொருள் : மூலப்பொருள்
14. முழுமை : பகுதி
15. படிப்பு : பிரிவு
16. செயல் : விளைவு
17. கருவி : அளவீடு
18. அளவீடு : அலகு
19. நோய் : நோய்க்காரணி
20. தலைப்பு : தொடர்புடைய படிப்பு
21. விலங்குகள் / பறவைகள் : எழுப்பும் ஒலி
22. வார்த்தை : தீவிரம்
23. விளையாட்டு : தொடர்புடைய கோப்பை
24. வார்த்தை : பொருள்
25. வார்த்தை : எதிர்ச்சொல்
26. வேலையாள் : வேலை பார்க்கும் இடம்
27. பொருள் : கண்டுபிடித்தவர் பெயர்

Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

வழிமுறை : (வினா எண் 1 – 60)
ஒவ்வொரு வினாவிலும் ? குறியிட்ட இடத்தை கொடுக்கப்பட்டுள்ள 4 மாற்று விடைகளில் இருந்து நிறைவு செய்ய வேண்டும் : : என்னும் குறியீட்டிற்கு முன்னர் / பின்னர் இரு எழுத்துக்கள் / வார்த்தைகள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அந்த தொடர்பை பிரதிபலிக்கும் வகையில் : : என்னும் குறியீட்டிற்கு முன்னர் / பின்னர் வரும் எழுத்துக்கள் / வார்த்தைகள் அமைய வேண்டும்.

1. Botany : Plant :: Entomology : ?
   1) Snakes 2) Insects
   3) Birds 4) Germs

2. Acting : Theatre :: Gambling : ?
   1) Casino 2) Club
   3) Bar 4) Gym

3. Menu : Food :: Catalogue : ?
   1) Rack 2) Newspaper
   3) Library 4) Books

4. Mango : Fruit :: Potato : ?
   1) Root 2) Fruit
   3) Stem 4) Flower

5. Dog : Bark :: Goat : ?
   1) Bleat 2) Howl
   3) Grunt 4) Bray

6. Food : Stomach :: Fuel : ?
   1) Plane 2) Truck
   3) Engine 4) Automobile

7. Moon : Satellite :: Earth : ?
   1) Sun 2) Planet
   3) Solar System 4) Asteroid

8. Cricket : Bat :: Hockey : ?
   1) Field 2) Stick
   3) Players 4) Bat

9. Smoke : Pollution :: War : ?
   1) Destruction 2) Treaty
   3) Victory 4) Peace

10. Chennai : Tamilnadu :: Kochin : ?
    1) Karnataka 2) Kerala
    3) Goa 4) Trivandram

11. Girl : Beautiful :: Boy : ?
    1) Smart 2) Heroic
    3) Courageus 4) Handsome

12. Chair : Furniture :: Shoe : ?
    1) Socks 2) Footwear
    3) Leather 4) Cobbles

13. Typist : Typewriter :: Writer : ?
    1) Book 2) Paper
    3) Script 4) Pen

14. Book : Publisher :: Film : ?
    1) Producer 2) Director
    3) Editor 4) Writer

15. Haemoglobin : Iron :: ? : Chlorophyll
    1) Copper 2) Magnesium
    3) Cobalt 4) Calcium

16. Thunder : Rain :: Night : ?
    1) Evening 2) Dark
    3) Day 4) Dusk

17. Aryabhatta : Mathematician :: Varahimihira : ?
    1) Physician 2) Astronaut
    3) Scientist 4) Architect

Scanned by TapScanner

18. Leather : Cobbler :: Wood : ?
1) Furniture 2) Goldsmith
3) Carpenter 4) Mason

19. Air : Atmosphere :: Water : ?
1) Hydrosphere 2) Ecosphere
3) Bioshpere 4) Stratosphere

20. Circle : Circumference :: Square : ?
1) Volume 2) Area
3) Diagram 4) Perimeter

21. Burn : Oinment :: Grief : ?
1) Sorrow 2) Adversity
3) Consolation 4) Pity

22. Pen : Stationary :: Chair : ?
1) Wood 2) Rest
3) Room 4) Furniture

23. Dam : Water :: Godown : ?
1) Sweets 2) Crab
3) Grain 4) Grass

24. Crime : Court :: Disease : ?
1) Lawyer 2) Punishment
3) Hospital 4) Doctor

25. Millionaire : Wealth :: Genius : ?
1) Capability 2) Smartness
3) Intelligence 4) Awareness

26. Page : Book :: Brick : ?
1) Heap 2) Building
3) Clay 4) Mason

27. Driving : Bus :: Flying : ?
1) Air 2) Kite
3) Bird 4) Aeroplane

28. Bullet : Rifle :: Arrow : ?
1) Archer 2) Bow
3) Target 4) Cord

29. House : Mazon :: Furniture : ?
1) Wood 2) Chair
3) Table 4) Carpentor

30. Needle : Thread :: Pen : ?
1) Write 2) Ink
3) Cap 4) Paper

31. 'Fish' is related to 'Water'. In the same way as 'Bird' is related to
1) Water 2) Sky
3) Food 4) Air

32. 'Soldier' is related to 'Army'. In the same way as 'Pupil' is related to
1) Education 2) Teacher
3) Student 4) Class

33. 'Medicine' is related to 'Patient'. In the same way as 'Education' is related to
1) Teacher 2) School
3) Student 4) Tuition

34. Ditch : Depth :: ?
1) Valley : Beauty
2) River : Blue water
3) Moon : Eclipse
4) Mountain : Height

35. Ocean : Water :: ?
1) Mountain : Height
2) Glacier : Ice
3) Cave : Lion
4) Refrigerator : Milk

36. Rest : Weary :: ?
1) Water : River
2) Thoughts : Politics
3) Food : Hungry
4) Driving : Driver

37. Cure : Disease :: Heal : ?
1) Illness 2) Injury
3) Recover 4) Sick

38. AFKP : ZUPK :: BGLQ :?
1) YUQM 2) XURO
3) YTOJ 4) YXWV

Scanned by TapScanner

39. FILM : ADGH :: MILK : ?
1) ADGF 2) HDGE
3) HDGF 4) HEGF

40. REASON : SFBTPO :: THINK : ?
1) SHHMJ 2) UJKPM
3) UIJOL 4) UHINK

41. AZBY : CXDW :: EVFU : ?
1) GTHS 2) GSTH
3) GHTS 4) TGSH

42. Effort : Success :: ?
1) Play : Cricket
2) Healthy : Vitamin
3) Climb : Mountain
4) Reading : Knowledge

43. Earth : Moon :: ?
1) Asia : India
2) Ship : Boat
3) Sun : Venus
4) School : Classroom

44. Mountain : Height :: ?
1) Valley : Beauty
2) River : Water
3) Moon : Shadow
4) Ditch : Depth

45. ABD : CDF :: MNP : ?
1) LNO 2) OPR
3) KLM 4) VXY

46. LNPQ : ACEF :: TVXY : ?
1) MNPQ 2) OQRT
3) STVX 4) IKMN

47. CDEF : fghi :: klmn : ?
1) hijk 2) FGHI
3) HIJK 4) NOPQ

48. Iron : Copper : Zinc
1) Ceramic 2) Carbon
3) Silver 4) Coal

49. Jute : Cotton : Wool
1) Terylene 2) Silk
3) Rayon 4) Nylon

50. Grandfather : Father : Brother
1) Son-in-law 2) Son
3) Father-in-law 4) Baby

51. Ohm : Watt : Volt
1) Light 2) Electricity
3) Hair 4) Ampere

52. Pituitary : Thyroid : Pancreas
1) Adrenal 2) Heart
3) Liver 4) Kidney

53. Sodium : Potassium : Zinc
1) Sulphur 2) Calcium
3) Water 4) Iodine

54. Kanchanjunga : Anaimudi : Dhaulagiri : : ?
1) Himadri 2) Zaskar
3) Nandadevi 4) Karakoram

55. Pathology : Cardiology : Radiology
1) Geology 2) Zoology
3) Haemotology 4) Biology

56. aCE : bDF :: f HJ : ?
1) giK 2) ghK
3) dfH 4) fhL

57. DDa : aDD :: RRb : ?
1) BBr 2) bRR
3) RRR 4) BrR

58. CAT : DDY :: BIG : ?
1) CLL 2) CLM
3) CML 4) CEP

59. MUMBAI : LTLAZH :: DELHI : ?
1) CDKGG 2) IHLED
3) CDKGH 4) BCKGH

60. EIGHTY : GIEYTH :: OUTPUT : ?
1) TUOTUP 2) TUOUTP
3) UTOPTU 4) UOTUPT

Scanned by TapScanner

5. மாறுபட்ட எண்ணை / இணை எண்ணைத் தேர்ந்தெடுத்தல் (Odd One out - Number / Pair of Numbers)

இவ்வகையில் நான்கு எண்கள் / இணை எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் எவையேனும் மூன்று எண்கள் / இணை எண்களுக்கிடையே ஏதேனும் ஒரு பொதுத்தன்மை இருக்கும்.மீதமுள்ள ஒரு எண்/ இணை எண் மட்டும் தொடர்பின்றி இருக்கும். அந்த தொடர்பற்ற எண் / இணை எண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வினாவில் உள்ள நான்கு எண்களுள் / இணை எண்களுள் மூன்று எண்களுக்கிடையே, வர்க்கம், கனம், பகுஎண், பகா எண், அடுக்குகள், மடங்குகள், பொது வகுத்திகள், ஏறுவரிசை எண்கள் இறங்கு வரிசை எண்கள் போன்ற தொடர்புகளுள் ஏதேனும் ஒன்று அமையலாம். மேலும் வர்க்கம், கனம், அடுக்கு, மடங்குகளிலிருந்து ஓர் எண்ணைக் கூட்டியோ / கழித்தோ / பெருக்கியோ/ வகுத்தோ அவ்வெண்கள் அமைக்கப்படலாம்.

எ.கா : (1)

1) 81 2) 25 3) 16 4) 18

81, 25, 16, முறையே 9,5,4, ன் முழுவர்க்கங்கள் ஆகும்.

18 – மாறுபட்ட எண்ணாகும்.

எ.கா : (2)

1) 13 2) 19 3) 27 4) 31

13, 19, 31 – பகா எண்கள்

27 – பகு எண் (மாறுபட்ட எண்)

எ.கா : (3)

1) 4,64 2) 7,343 3) 9,121 4) 5,125

4,64 → 4, 4^3

7,343 → 7,7^3

9,121 → $\boxed{9,11^2}$ வேறுபட்டது.

5,125 → 5,5^3

எ.கா : (4)

1) 4,22 2) 6,42 3) 8,72 4) 10,110

4,22 → $\boxed{4, 22}$ வேறுபட்டது.

6,42 → 6, 6 X 7 = 42

8,72 → 8, 8 X 9 = 72

10,110 → 10, 10 X 11 = 110

Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

நான்கு எண்கள் / இணை எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் எவையேனும் மூன்று எண்கள் / இணை எண்களுக்கிடையே ஏதேனும் ஒரு பொதுத்தன்மை இருக்கும். மீதமுள்ள ஒரு எண்/ இணை எண் மட்டும் தொடர்பின்றி இருக்கும். அந்த தொடர்பற்ற எண் / இணை எண்ணைத் தேர்ந்தெடு.

Directions : In the given Questions, there are four Groups of Numbers / Pairs of numbers of which three are alike and one is different. Find the one which is different.

1. 1) 0 2) 4 3) 18 4) 50

2. 1) 124 2) 243 3) 601 4) 700

3. 1) 120, 101 2) 37, 26 3) 99,82 3) 143, 122

4. 1) 5,124 2) 3, 28 3) 4, 65 4) 9, 730

5. 1) 1234 2) 3456 3) 0123 4) 2468

6. 1) 25,5,5 2) 51,3,17 3) 96,6,16 4) 75, 5, 25

7. 1) 239 2) 628 3) 325 4) 459

8. 1) 200 2) 700 3) 800 4) 500

9. 1) 64,23 2) 27, 36 3) 85, 29 4) 82, 34

10. 1) $\frac{2}{14}$ 2) $\frac{3}{12}$ 3) $\frac{5}{20}$ 4) $\frac{7}{28}$

11. 1) 2200 2) 2020 3) 2002 4) 2022

12. 1) 50 - 66 2) 63 - 77 3) 22 - 38 4) 64 - 80

13. 1) 7 (113) 8 2) 1 (5) 2 3) 3 (17) 4 4) 5 (61) 6

14. 1) 21 2) 39 3) 63 4) 83

15. 1) 32 - 8 2) 15 - 5 3) 36 - 18 4) 26 - 6

16. 1) 139117 2) 138112 3) 13791 4) 13678

17. 1) 3,11 2) 5,13 3) 17,23 4) 1,64

18. 1) 4,22 2) 6,42 3) 8,70 4) 10,110

19. 1) 4,8 2) 9,64 3) 25,125 4) 36,216

20. 1) 144 2) 169 3) 202 4) 324

21. 1) 2 2) 12 3)18 4) 80

22. 1) 22 2)46 3) 78 4) 124

23 1) 1,10 2) 3,30 3) 5,130 4) 7,350

24. 1) 8 2) 27 3) 63 4) 125

25. 1) 144, 3 2) 169, 4 3) 889, 5 4) 909, 6

26. 1) 87 2) 17 3) 13 4) 29

27. 1) 232 2) 431 3) 612 4) 813

28. 1) 2 2) 23 3) 31 4) 32

29. 1) 417 2) 526 3) 750 4) 979

30. 1) 530 2) 642 3) 980 4) 872

Scanned by TapScanner

6. மாறுபட்ட எழுத்துக்கள்/வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தல்

[Odd one out - Letters/words]

இவ்வகையில் நான்கு எழுத்துக்கள்/வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் எவையேனும் மூன்று எழுத்துக்கள் / வார்த்தைகளுக்கிடைய மட்டும் பொதுத்தன்மை இருக்கும். மீதமுள்ள ஒரு எழுத்து / வார்த்தையானது தொடர்பின்றி இருக்கும். அந்த தொடர்பற்ற எழுத்து / வார்த்தையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வகை : I

ஏதேனும் ஒரு பொதுத்தன்மை கொண்ட மூன்று வார்த்தைகள் மற்றும் மாறுபட்ட வார்த்தைகளைக் கொண்டு அமையும் வினாக்கள்.

இவ்வகையைப் பொறுத்தவரையில் அனைத்துப் பாடங்களைப் பற்றிய (இடைநிலை கல்வி அளவில்) அடிப்படைக் கருத்துக்களைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் – நூலாசிரியர் பெயர்கள், புகழ்பெற்ற நூல்கள், காப்பியங்களின் கதாபாத்திரங்கள் etc....

ஆங்கிலம் – Vowels, Consonants, Articles, Parts of speech, ஆங்கில எழுத்துக்களின் இடமதிப்பு, (இடமிருந்து வலம் மற்றும் வலமிருந்து இடம்)

அறிவியல் – பொருட்களின் தன்மைகள், பொருட்களின் நிலைகள், விஞ்ஞானிகளின் பெயர்கள், தாவரங்கள், விலங்குகள், தொடர்புடைய படிப்புகள், கண்டுபிடிப்புகள்

சமூகஅறிவியல்

வரலாறு : வரலாற்று நிகழ்வுகள், போர்கள், உடன்படிக்கைகள், திட்டங்கள்,பேரரசுகள் etc....

குடிமையியல் : முதல்வர்கள், பிரதமர்கள், குடியரசுத்தலைவர்கள், சட்டப்பிரிவுகள், அரசுத்திட்டங்கள் சமீபத்திய தகவல்கள் etc....

புவியியல் : நாடுகள், மாநிலங்கள், தலைநகரங்கள், ஆறுகள், மலைகள், கோள்கள், முக்கிய இடங்கள்.

வழிமுறை : (வினா எண். 1 – 2)

மாறுபட்ட வார்த்தையைத் தேர்ந்தெடுக்கவும்.

(எ.கா: 1)

1) தமிழ் 2) ஆங்கிலம் 3) அறிவியல் 4) தெலுங்கு

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு – மொழிகள்

அறிவியல் – பாடம் சார்ந்தது (வேறுபட்டது)

Scanned by TapScanner

(எ.கா 2)

1) Temple 2) Inn 3) Church 4) Mosque

Temple, Church, Mosque – வழிபாட்டுத் தலங்கள்

Inn – தங்குமிடம் (வேறுபட்டது)

கவனத்தில் கொள்க :

வகை : I ல் NMMS, NTSE - ல் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே வார்த்தைகள் கொடுக்கப்படுவதால், மாணாக்கர்கள் தங்களுடைய ஆங்கில சொற்களஞ்சிய அறிவை (English Vocabularies) வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வார்த்தைகளின் அர்த்தம் தெரிந்தால்தான் அவற்றிற்கிடையேயான பொதுத்தன்மையைக் கண்டறிய முடியும்.

வகை : II

ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட வினாக்கள்:

(எ.கா : 1)

1) E 2) I 3) U 4) X

E, I, U உயிரெழுத்துக்கள் (Vowels)

X - மெய்யெழுத்து (Consonants) - வேறுபட்டது.

(எ.கா : 2)

1) AC 2) DF 3) HK 4) LN

A C D F H K L N

+2 +2 +3 +2

(எ.கா : 3)

1) REAR 2) RADAR 3) CIVIC 4) NOON

RADAR, CIVIC, NOON - Polyndromes [இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும்] எழுதினால் ஒரேமாதிரியாக வரும்.

REAR – வேறுபட்டது

(எ.கா : 4)

1) $\frac{A}{Z}$ 2) $\frac{L}{O}$ 3) $\frac{S}{H}$ 4) $\frac{L}{P}$

$\frac{A}{Z}, \frac{L}{O}, \frac{S}{H}$ ⇒ ஆங்கில எழுத்துக்களில், தொகுதியானது இடமிருந்து வலமாகவும், பகுதியானது வலமிருந்து இடமாகவும் எழுதப்பட்டுள்ளது.

$\frac{L}{P}$ ⇒ வேறுபட்டது.

Scanned by TapScanner

பயிற்சி வினாக்கள் (Exercise Questions)

வழிமுறை: (வினா எண் 1 - 60)

கொடுக்கப்பட்ட 4 வார்த்தைகளில் தொடர்பற்றதாக உள்ள வார்த்தையை தேர்ந்தெடு.

Choose the word which is least like the other words.

1. 1) Goat 2) Tiger 3) Deer 4) Cow

2. 1) Moon 2) Earth 3) Mars 4) Jupiter

3. 1) Z 2) E 3) M 4) B

4. 1) Galaxy 2) Jupiter 3) Earth 4) Uranus

5. 1) Kaveri 2) Vaigai 3) Krishna 4)Thamirabarani

6. 1) Bicycle 2) Bus 3) Aeroplane 4) Ship

7. 1) Ooty 2) Yercaud 3) Simla 4) Kodaikanal

8. 1) Iron 2) Aluminium 3) Mercury 4) Gold

9. 1) June 2) July 3) August 4) December

10. 1) Onion 2) Cauliflower 3) Raddish 4) Potato

11. 1) AYC 2) EUG 3) MMO 4) IQJ

12. 1) K12M 2) G9I 3) P17R 4) E6G

13. 1) HJMQ 2) PRTX 3) MORV 4) IKNR

14. 1) D10F 2) G20M 3) K22M 4) P36T

15. 1) Chandighar 2) Chennai 3) Kolkatta 4) Bengaluru

16. 1) Telephone 2) Cellphone 3) Television 4) Tele Fax

17. 1) Bus 2) Howercraft 3) Ship 4) Satellite

18. 1) Moscow 2) New York 3) Paris 4) New Delhi

19. 1) AF 2) LQ 3) WZ 4) DI

20. 1) $\frac{X}{Z}$ 2) $\frac{A}{D}$ 3) $\frac{R}{T}$ 4) $\frac{D}{F}$

21. 1) CEDF 2) GIHJ 3) KLMN 4) OQPR

22. 1) DFI 2) JLP 3) KMQ 4) SUY

23. 1) Thilak 2) Gogale 3) Nehru 4) Gandhiji

24. 1) Param Veer Chakra 2) Bharat Rathna 3) Padmashri 4) Padmavibusan

Scanned by TapScanner

25. 1) Kochi 2) Visak
3) Mumbai 4) Tuticorin

26. 1) South Africa
2) Saudi Arabia
3) England
4) India

27. 1) BXD 2) EUG
3) HRK 4) KOM

28. 1) CEHM 2) MORV
3) JLOS 4) QSVZ

29. 1) CRY 2) IVY
3) TRY 4) STY

30. 1) PKJQ 2) WDBY
3) RIGT 4) FUSH

31. 1) Triangle
2) Trapazium
3) Isoceles Trapazium
4) Rhombus

